# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.73/2020 | Village | : | |
| Prosecution witness | : | PW-24 | Taluk | : | |
| Name | : | திரு. டாக்டர் தமிழ்மணி | Occupation | : | |
| Father Name | : | திரு. | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 16.9.25**

A5,7 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது தஞ்சை மருத்துவகல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துத்துறையில் பேராசிரியாக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.6.2019 அன்று அதே துறையில் பணியில் இருந்தபோது மதியம் 12.20 மணிக்கு நடுகாவேரி காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் கு.எண் 90/19 வழக்கில் சம்மந்தபட்ட சுமார் 22வயது மதிக்கதக்க பிரசாந்த் என்ற ஆண் பிரேதத்தை காவலர் எண் 499 சரவணன் என்பவர் அடையாளம் காட்ட அதன் அடிப்படையில் சடல கூறாய்வு மேற்கொண்டேன் அப்போது நேரம் மதியம் 12.30 மணி. அந்த நபர் சாதாரண போசாக்குடன் காணபட்டார் அப்போது அவருடைய உடலில் முழுவதும் மரண விறைப்பு தன்மை இருந்தது கைகால்கள் வெளிறி இருந்தது. காய்ந்த உறைந்த இரத்தம் மற்றும் மணல் துகள்கள் தலை, முகம், நெஞ்சுபகுதி இரண்டு கை கால்களில் ஒட்டியிருந்தது.

இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள்

1) சிதைந்த காயம் 13X4செ.மீ அளவில் எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க மேல் தலை பகுதியில் மற்றும் பின் தலை பகுதியில் காணபட்டது. மேலும் இந்த காயத்தின் கீழ் உள்ள எலும்புகள் உடைந்தது அதன் வழியாக மூளை வழிந்து கொண்டிருந்தது.

2) சிதைந்த காயம் 1X1X1 செ.மீ அளவில் இடதுபக்க முகத்தில் காணபட்டது. அதனை சுற்றி சிராய்ப்பு காயம் 8X1 செ.மீ அளவில் காணபட்டது.

3) சிதைந்த காயம் 2X1X1 செ.மீ அளவில் இடது பக்க காதில் காணபட்டது .

4) கன்றிய காயங்கள்5X4 செமீ அளவில் இடது பக்க காது எலும்பில் காணபட்டது, 7X3 செமீ அளவில் இடது தாடையிலும், 4X2செமீ அளவு இடது பக்க மேல் உதட்டில் உள் பகுதியில் காணபட்டது. 8X3செமீ அளவில் கழுத்தின் பின்பகுதியில் இடது பக்கம் காணபட்டது.

5) சிராய்ப்பு காயங்கள் 2X1 செமீ அளவில் இடது பக்க கழுத்தில் காணபட்டது, 10X0.5 செமீ அளவில் மற்றும் 5X0.5 செமீ அளவில் இடது பக்க கழுத்தின் பின்பகுதியில் கீழ் பகுதியில் காணபட்டது, 3X2 செமீ அளவில், 1X1 செமீ அளவில் இடது தோல் பட்டையிலும் 14X0.5 செமீ, 8X0.5 செமீ இடது பக்க கை புஜத்தின் வெளி பகுதியிலும் காணபட்டது. 12X3 செமீ அளவில் இடது நெஞ்சுபகுதியின் நடுபகுதியில் காணபட்டது. 0.5X0.5 செமீ இடது பக்க இடுப்பிலும், 1X0.5 செமீ இடதுபக்க கால் பகுதியிலும், 4X2 செமீ, 1X1 செமீ அளவில் வலது பக்க கையிலும் காணபட்டது.

6) Graze வகையான சிராய்ப்பு காயங்கள் 14X13 செமீ அளவில் வலதுபக்க தோல்பட்டை பின் எலும்பிலும், 22X16 செமீ இடது பக்க தோல்பட்டை பின் எலும்பிலும், 28X11 செமீ அளவில் இடது பக்க வயிற்றின் பின் பகுதியிலும், 24X7 செமீ வலதுபக்க வயிற்றின் பின்பகுதியிலும் காணபட்டன.மேலே சொன்ன சிராய்ப்பு காயங்கள் மேலிருந்து கீழே நோக்கிய வகையில் காணபட்டது.

தலையை திறந்து பார்க்கையில் 29X18 செமீ அளவில் கன்றிய காயம் இடது பக்க தலை எலும்பு தோலில் காணபட்டது. இரண்டு பக்க தலை தசை கன்றி போயிருந்தது. 10X5 செமீ அளவில் உள்வாங்கிய தலை எலும்பு உடைவுகள் இடது பக்க தலை எலும்பிலும் பின்பக்க தலை எலும்பிலும் காணபட்டது. மேலும் இதிலிருந்து கோடுபோன்ற தலை எலும்பு உடைவு இடது பக்க தலை எலும்பில் காணபட்டது. பெருமூளை மற்றும் சிறுமூளை முழுவதும் இரத்த கசிவு இருந்தது. பெருமூளையின் அடிபகுதியில் இரத்தம் உறைந்த நிலையல் காணபட்டது. இடது பக்க பெருமூளை சிதைந்து காணபட்டது. பெருமூளை மற்றும் சிறுமூளை உள் பகுதியில் இரத்தம் உறைந்தநிலையில் காணபட்டது. தலை எலும்பின் அடிபாகம் உடைந்து பல்வேறு துண்டுகளாக காணபட்டது.

இதயம் அதன் இரத்த குழாய்கள் நல்லநிலையில் இருந்தது. நாவடி எலும்பு நல்லநிலையில் இருந்தது. இரைப்பையில் 20மிலி பழுப்பு நிற திரவம் இருந்தது. வாடை எதுவும் இல்லை. நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் நல்லநிலையில் இருந்தது. சிறுகுடலில் 20மிலி அளவில் பித்ததிரவம் இருந்தது. வாடை எதுவும் இல்லை. சிறுநீர்ப்பையில் 10மிலி சிறுநீர் இருந்தது. முதுகு தண்டுவட எலும்பு நல்லநிலையில் இருந்தது. உடல் உள்ளுறுப்புகள் இராசயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டன. இறப்பானது பிரேத பரிசோதனைக்கு முன்பு 24 மணிநேரத்திலிருந்து 48 மணிநேரத்திற்குள் ஏற்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளேன். இராசயன பகுப்பாய்வின் அடிப்படையில் உடல் உள்ளுறுப்புகளில் விஷம் அல்லது ஆல்கஹால் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதி கருத்துரையில் இறந்தவர் அவருக்குஏற்பட்ட தலை, முகம் காயங்களினால் முக்கிய உறுப்பான மூளையில் அடிபட்டு இறந்திருக்கலாம் என்று சான்று வழங்கினேன் அந்த சான்று **அ.சா.ஆ.16** ஆகும். விசரா அறிக்கை **அ.த.சா.ஆ.17** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆயுதங்களை காட்டி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் எந்த மருத்துவரை பின்பற்றி என்னுடைய சடலகூறாய்வு மேற்கொண்டேன் என்றால் அரசாங்க வழிமுறைகள் மற்றும் என்னுடைய கல்வி அறிவில் இருந்து மேற்கொண்டேன். கன்றிய காயத்திற்கும் கிழிந்த காயத்திற்கும் சிறிய வேறுபாடு உள்ளது என்றால் ஆமாம் வேறுவேறு வகைதான். அவைகளை என்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் அவைகளை வேறுபடுத்தி கூறியுள்ளேனா என்றால் ஆமாம். தலையில் ஏற்பட்ட காயம் இறப்பிற்கு காரணம் என்றால் ஆமாம். இறப்பு 24 மணிநேரத்திலிருந்து 48 மணிநேரத்திற்குள் ஏற்பட்டிருக்கலாம் என்று சொன்னது தவறு என்றும் அதற்கு முன்பாகவே ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. உடல் அழுகிய நிலை என்பது இறப்பிற்கு பின்னிட்டு எத்தனை மணி நேரத்திற்கு பின்பு ஏற்படும் என்றால் பொதுவாக 48 மணிநேரத்திற்கு பிறகு உடல் வைக்கபட்டிருக்கும் சூழ்நிலை சுற்றுபுற சூழ்நிலையை பொறுத்து ஏற்படும். காயங்கள் எல்லாவற்றிலும் மணல் ஒட்டியிருந்தது என்றால் ஆமாம். நான் சொல்லும் இறந்தநபரின் பிரேத்தை வேறு விலங்குகள் இழுத்து போயிருந்ததா என்றால் இல்லை. மேற்படி நபரின் உடலில் இருந்த காயங்கள்

கடினமான தரையில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் இல்லை. கடினமான பொருட்களின் மீது ஒரு நபர் விழுந்தால் அவர் விழும் திசையை பொறுத்து இம்மாதிரியான காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் தலை காயத்தை தவிர மற்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த காயங்கள் எல்லாம் ஏற்படுத்த நிறைய நபர்கள் தேவை என்றால் தனிபட்ட நபராலோ அதற்கு மேற்பட்ட நபர்களாலோ ஏற்படுத்த வாய்ப்புள்ளது. பொதுவாக முந்தைய அறிஞர்களின் ஏதாவது ஒருமுறையை பின்பற்றிதான் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றால் படிப்பு என்பது கடல் போன்றது அவற்றை படித்து உள்வாங்கி அதிலிருந்து கிடைக்கும் அறிவை பயன்படுத்தி ஆய்வை மேற்கொண்டேன்.ஒரு நபர் இறக்கும் வரை எல்லா விஷயத்தையும் படிக்கமுடியாது என்றால் ஆமாம். கடினமான தரையில் ஒரு நபர் விழுந்தாலோ அல்லது கடினமான பொருட்களின் மீதும் கூர்மையான பொருட்களின் மீதும் விழுந்தாலோ இம்மாதிரியான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஏற்படலாம். விழும் வேகத்தை பொறுத்தும் காயங்கள் மாறுபடும் என்றால் ஆமாம். விசரா அறிக்கையை பற்றி விளக்கம் என்னால் சொல்லமுடியாது என்றால் அறிக்கையில் உள்ள தகவலை சொல்லாம் சோதனையை பற்றி சொல்லஇயலாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.